Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 250

திங்கட்கிழமை
04 ஒகஸ்ட் 2025

ஆடி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## முன்னாள் ஜனாதிபதிகள் போர்க்கொடி

விரிவு பக்கம்:- 02

## செம்மணிப் புதைகுழிகளை கண்டறிய இன்று 'ஸ்கான்'

யாழ்ப்பாணம், ஒக.4

செம்மணி - சித்துப்பாத்தி இந்துமயானத்தில் இனங் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இதுவரையில் 130 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், மேலும் மனிதப் புதை குழிகள் உள்ளனவா என்பதைக் கண்டறியும் நட வடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. 11

## குருநகரில் சிக்கிய ஹெரோய்ன் தம்பதி

### 90 மில்லிகிராம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக.4

நீண்டகாலமாக ஹெரோய்ன் போதைப்பொருள் விற் பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம், குரு நகர்ப் பகுதியில் கணவனும், மனைவியும் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து 90 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். 11

## செம்மணிப் புதைகுழிகளை பார்வையிடவுள்ள இ.ம.உ.ஆ.

யாழ்ப்பாணம், ஒக.4

செம்மணி- சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இனங் காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இன்று நேரில் சென்று பார்வை யிடவுள்ளது.

இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழுவின் மூன்று ஆணையாளர் களும், இரண்டு பணிப்பா ளர்களும், யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலக அலு வலர்களும் அடங்கிய குழு வினர் மனிதப் புதைகுழிப் 11

## மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஒக.4

வடக்கு மாகாணத்தில் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான 11

## செம்மணியில் தொடர்ந்தும் வெளிக்கிளம்பும் என்புக்கூடுகள்

### இதுவரை 130 என்புக்கூடுகள் அடையாளம் 120 என்புக்கூடுகள் மீட்பு



யாழ்ப்பாணம், ஒக.4

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இனங்காணப்பட் டுள்ள மனிதப் புதைகுழியில் நேற்று ஞாயிற்றுக்கிழமையும் 4 மனித என்புக்கூட்டுத் தொகுதி கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 11

## ஏற்றுமதி, இறக்குமதிகளை சமப்படுத்த விரும்பும் அமெ.

### இலங்கை விடயத்தில் இன்னமும் திருப்தியில்லை



கொழும்பு, ஒக.4

இலங்கைக்கு விதிக்கப் பட்ட பரஸ்பர இறக்குமதி தீர்வைவரியை அமெரிக்கா 20வீதமாகக்குறைத்துள்ள போதும், இலங்கை விட யத்தில் அமெரிக்கா இன் னமும் திருப்திகொள்ள வில்லை என்று சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள் ளன.

பங்களாதேஷ், கம்போ டியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், வியட்நாம் ஆகிய நாடுகளுடன் அமெ ரிக்கா செய்துகொண்ட ஒப் பந்தங்களைப் போன்று இலங்கைக்கான அமெ ரிக்க ஏற்றுமதிகள் மீதான அனைத்து வரிகளையும் நீக்கவேண்டும் என்று அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, அமெரிக்கா 11

## பௌத்த விவகாரத்துக்கு பதில் ஆணையாளர்

கொழும்பு, ஒக.4

பௌத்த விவகாரங் களுக்கான ஆணையா ளர் நாயகமாகப் பதவி வகித்த பிரமேசிறி ரத்நா யக்க, கடமை களைச் சரியா 11

## சர்வதேச விசாரணை நடந்தால் சாட்சியமளிக்க சோமரத்ன தயார்

விரிவு பக்கம் :- 12

## முச்சந்தி முரளி

'வருத்தத்தைக் கண்டுபிடிக்க பாவிச்ச ஸ்கான் தான் இப்ப செத்தவையைக் கண்டுபிடிக்கவும் உதவுது பாருங்கோ'

## 728 துப்பாக்கி ரவைகளுடன் வவுனியாவில் இருவர் கைது



வவுனியா, ஒக.4

கொழும்பில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டவர் வழங்கிய தகவ லுக்கு அமைய வவுனியாவில் நேற்றுமுன்தினம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், நேரியகுளம் பிரதேசத்தில் வீடொன் றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 728 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட் டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி கொழும் பில் துப்பாக்கியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், அவர் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி என்று பொலிஸ் தரப்புக் 11

## சுருட்டுத் தீ பற்றியதால் முதியவர் பரிதாபச்சாவு

யாழ்ப்பாணம், ஒக.4

சுருட்டில் இருந்த தீ சாரத்தில் பற்றியதால் படுகாயம டைந்து சிகிச்சை பெற்றுவந்த முதியவர் உயிரிழந் துள்ளார்.

யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த மாதன் சின்ன மணி (வயது-95) என்பவரே உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவம் கடந்த 26ஆம் திகதி இரவு நடந்துள் ளது. தீக்காயங்களுக்குள்ளானவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட் டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்தார். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 03.08.2025 | திகதி 03.08.2025 | திகதி 03.08.2025 | திகதி 03.08.2025 | திகதி 03.08.2025 | திகதி 03.08.2025 | திகதி 03.08.2025 | திகதி 03.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4152 | சீட்டிழுப்பு இலக்கம் 1219 | சீட்டிழுப்பு இலக்கம் 0178 | சீட்டிழுப்பு இலக்கம் 2258 | சீட்டிழுப்பு இலக்கம் 5910 | சீட்டிழுப்பு இலக்கம் 1940 | சீட்டிழுப்பு இலக்கம் 0485 | சீட்டிழுப்பு இலக்கம் 0026 |
| ஆங்கில எழுத்து P | வெற்றி இலக்கினம் தனுசு | ஆங்கில எழுத்து B | ஆங்கில எழுத்து H; சுப்பர் இலக்கம் 26 | ஆங்கில எழுத்து H | ஆங்கில எழுத்து X | ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கினம் மகரம் |
| வெற்றி இலக்கங்கள் 03 47 57 61 | வெற்றி இலக்கங்கள் 05 06 23 25 | வெற்றி இலக்கங்கள் 6 5 8 8 | வெற்றி இலக்கங்கள் 36 45 58 75 | வெற்றி இலக்கங்கள் 3 1 1 2 5 4 | வெற்றி இலக்கங்கள் 42 56 59 65 | வெற்றி இலக்கங்கள் 1 2 5 4 | வெற்றி இலக்கங்கள் 16 28 30 46 |
| விசேட எழுத்து P | | | | | விசேட எழுத்து X | | |

சிறப்புரிமைகள் இரத்து

# நீதிமன்றை நாடுகின்றனர் முன்னாள் எம்.பி.க்கள், ஜனாதிபதிகள்



கொழும்பு, ஓக. 4

**தமக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவை நிறுத்தும் அரசாங்கத்தின் முடிவுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு நாடாளுமன்ற முன்னாள் ஒன்றியம் திட்டமிட்டுள்ளது.**

சுமார் 500 வரையான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒன்றியம், இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

ஐந்து வருடகால நாடாளுமன்ற பதவிக்காலத்தை முழுமையாக நிறைவுசெய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தாம் பெற்ற சம்பளத்தில் மூன்றில் ஒரு வீதம் ஓய்வூதியமாக வழங்கப்பட்டுவருகின்றது. 10, 15 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிவகித்தவர்களுக்குத் தாம் பெற்ற சம்பளத்தில் மூன்றில் இரு பங்கு ஓய்வூதியமாக வழங்கப்பட்டுவந்தது.

இந்நிலையில் இதனை நிறுத்துவதற்காக 1977 இல் இயற்றப்பட்ட சட்டத்தைத் திருத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகியுள்ளது. இந்தச் செயற்பாட்டை உடன் நிறுத்த வேண்டும் என்றும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் சந்திரிக்கா ஆகியோருடனும் இது சம்பந்தமாக பேச்சு நடத்த ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரியவருகின்றது. (ச-44)

## சுபிரி தன சம்பத

திகதி: 03.08.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை | வெற்றி வாரம்: 0618
ஆங்கில எழுத்து: K | வெற்றி இலக்கம்: 8 5 4 4 3 1

## Super Ball DLB

திகதி: 03.08.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2884 | ஆங்கில எழுத்து: V | வெற்றி இலக்கம்: 21 38 56 73

## சனிதா DLB

திகதி: 03.08.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: P | வெற்றி இலக்கம்: 11 17 27 64 | வெற்றி வாரம்: 5045

## SASIRI DLB

திகதி: 03.08.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 0740 | வெற்றி இலக்கம்: 39 45 47

## லக்ன ராசி DLB

திகதி: 03.08.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
மீனம் | வெற்றி இலக்கம்: 08 44 48 59 | சீட்டிழுப்பு வாரம்: 4596

## KAPRUKA DLB

திகதி: 03.08.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: D | சுப்பர் இலக்கம்: 27 | வெற்றி இலக்கம்: 07 13 46 55 | வெற்றி வாரம்: 2060

## அத கோடிபதி DLB

திகதி: 03.08.2025 | தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: Y | வெற்றி இலக்கம்: 17 43 44 47 | வெற்றி வாரம்: 2710

# முன்னாள் எம்.பி.க்களுக்கு அஸ்வெசும

கொழும்பு, ஓக.4

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு நிச்சயம் இரத்துச்செய்யப்படும். ஓய்வூதியத்தை இரத்துச்செய்த பின்னர் அவர்களுக்கு வாழ்வதற்குக் கஷ்டமெனில் அஸ்வெசுமவுக்கு விண்ணப்பிக்கலாம் என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களின் ஓய்வூதியம் இரத்துச்செய்யப்படும் என்பதை ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தலுக்கு முன்னரே அறிவித்திருந்தோம். ஜனாதிபதிகள் ஓய்வுபெற்ற பின்னர், அவர்களை எதற்காக மக்கள் பணத்தில் பராமரிக்கவேண்டும்- என்றார். (ச-44)

# ஓய்வூதியம் நீக்கம் சட்டத்துக்கு முரண்

திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக.4

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய ஓய்வூதியம் இரத்துச் செய்யப்படக்கூடாது. அது அரசமைப்பில் உள்ள விடயம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகில் பலம்பொருந்திய, அபிவிருத்தி அடைந்துவரும் மற்றும் வறுமை நாடுகளில்கூட முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அவர்களின் ஓய்வுகாலத்தில் வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதியத்தை நீக்கமுடியாது. அது அரசமைப்பில் உள்ள விடயம். தற்போது வழங்கப்படும் தொகை அதிகரிக்கப்படவேண்டும். அத்துடன், பணியாள் தொகுதி மற்றும் பாதுகாப்பு என்பன வழங்கப்படவேண்டும் - என்றார். (ச-44)



# முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பைப் பறிப்பது ஆபத்து

கூறுகிறார் சமன் ரத்னபிரிய

கொழும்பு, ஓக.4

போரை முடிவுக்குக் கொண்டுவந்த மஹிந்த ராஜபக்சமீது தமிழ் புலம்பெயரிகள் இன்னமும் வைராக்கியத்துடனேயே உள்ளனர். இதனால் அவரைப் பழிவாங்க முற்படக்கூடும். எனவே, அவர் உட்பட முன்னாள் ஜனாதிபதிகளுக்குப் பாதுகாப்பு அவசியம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதிப் பதவியை வகிப்பவர் துணிவுடன் முடிவுகளை எடுக்கவேண்டும். ஜனாதிபதியால் எடுக்கப்படும் முடிவு 90 வீதமானோருக்குச் சாதகமாக இருக்கலாம். 10 வீதமானோர் அதனை எதிர்க்கலாம். 10 சதவீதமானோர், ஜனாதிபதி ஓய்வுபெற்ற பின்னர் அவரை பழிவாங்க முற்படக்கூடும். அதனால்தான் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஓய்வின் பின்னரும் பாதுகாப்பு உள்ளிட்ட வரப்பிரசாதங்கள் வழங்கப்படுகின்றன.

குறிப்பாக மஹிந்த ராஜபக்ச போரை முடிவுக்குக் கொண்டுவந்த தலைவர். அவரைப் பழிவாங்கும் நோக்கில் சில தமிழ்ப் புலம்பெயரிகள் செயற்படலாம் - என்றார். (ச-44)


# வழிபாட்டிடங்களுக்கு நிதி கணக்காய்வு விசாரணை

கொழும்பு, ஓக. 4

இலங்கையிலுள்ள வணக்கஸ்தலங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதி தொடர்பில் கணக்காய்வு விசாரணை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

பௌத்த,கிறிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து நன்கொடையாகக் கிடைக்கும் நிதி கணக்காய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்று சர்வதேச நிதி நிறுவனங்கள் பல உத்தியோகப்பற்றற்ற முறையில் இந்த அரசிடம் கோரிக்கை முன்வைத்துவருகின்றன. அதன் அடிப்படையிலேயே அரசு மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளது என்று அரச வட்டாரங்கள் கூறுகின்றன. எனினும் இந்த நிதி பயன்படுத்தப்படுகின்ற விதம் தொடர்பில் சமயத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியே கணக்காய்வு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரச வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன. (ச-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருடாந்தப் பெருந்திருவிழாவின் ஐந்தாம் நாள் உற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-66)

# போயாதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.4

யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் போயாதின மாதாந்தக் கருத்துரையும் கலந்துரையாடல் நிகழ்வும் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.4 மணிக்கு கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

'கல்வி மறுசீரமைப்பு முன்மொழிவும் தேவைகளும் தீர்வுகளும்' எனும் தொனிப்பொருளில் சமூக அரசியல் கல்வி ஆய்வாளர் நியந்தினி கதிர்காமர் கருத்துரை வழங்குவார்.

நிகழ்வுக்கு ஆசிரிய ஆலோசகர் க.சிவகரன் தலைமை தாங்குவார். சமூக அரசியல் கல்வி ஆர்வலர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு விஞ்ஞானப் படிப்பு வட்டம் அழைப்புவிடுத்துள்ளது. (ச-66)

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்


யாழ்ப்பாணம், ஓக.4

அளவெட்டி தெற்கு வயல்வெளி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11.51மணி தொடக்கம் 1.34 மணி வரை உள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது. (ச-63)



நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களம் நடத்தும் உள்ளூர் உற்பத்திகளுக்கான வர்த்தகச் சந்தை சங்கிலியன் பூங்காவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (ச-41-17)





# நல்லூர்க் கந்தனை தரிசித்தார் பிரதமர்!

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காகப் பிரதமர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தார்.

இதன்போதே வரலாற்று பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தத் திருவிழா நடைபெற்றுவருகிற நிலையில் நேற்றுக் காலை பலத்த பாதுகாப்புடன் நல்லூருக்குச் சென்று விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார். (ச-20,66,27)

# தெய்வீக அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக.4

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் 'தெய்வீகக் கலை அர்ச்சனை' நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை நவாலியூர் கதிர்காம முருகன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும், பால சுப்பிரமணியம் ஹன்ஸ்குகனின் பக்தி இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-4)

(ஏழாம் திருவிழா)





## நல்லூரான் சிறப்பம்சம்

### மக்கள் துயர் களைவதெப்போ

தமிழ் வளர்த்த வேளே நல்லைத்
தலமுறையும் தேவே தொன்மைப்
புகழ் நிறைந்த சேயே அன்று
புரட்சி செய்தாய் நீயே தினமும்
அகில் பரவும் கோவிலில் அடியார்
அழுதுரைப்பர் நாவினால் பச்சை
மயில் சுமக்கும் சாமியே எங்கள்
மனம் நிறைந்தாய் மேவியே உந்தன்
துயில் கலைவதெப்போ
மக்கள் துயர் களைவதெப்போ

கலாபூஷணம்
நடராசா இராமநாதன்

### முடியிழந்த இனத்துக்கு மீண்டும் முடிசூட வைக்க வாராயோ?

தமிழ் மன்னனாம் சங்கிலியனின்
இராசதானியாம் நல்லூர்ப்பதி தனில்
கோவில்கொண்டு அருளும் தமிழ்க் குமரா!
ஒரேயொரு ரூபா நிதிப்பலத்தோடேயே
அகிலமாளும் அற்புதனே!! உன்னை
இடையறாது வழிபட்டுவரும் முடியிழந்த
தொன்மைக் குடிமக்களான
தமிழ் மக்கள் தனியாள்வதற்கு
மீண்டும் முடிசூட வைக்க வாராயோ?

வீரப்பதி விநோதன்

### நீலமயிலழகன் அலங்கார வேலனாய் வீதி வருகின்றான்

வள்ளி தெய்வயானையுடனுறை வடிவேலன்
புள்ளிமயில் மீதினிலே வீதி வருகின்றான்
தெள்ளு தமிழ் திருமுறைகள் வேதங்கள்
மங்கள வாத்தியங்கள் முழங்கிடவே
வள்ளல் குமரன் வீதி வருகின்றான்
தேமதுர மணம் கலந்த தசாங்க
தேவதாரு சாம்பிராணி நறுமணம்
நாலா வீதியும் கலந்திடும் நிதம் அடியவர்
நேர்த்திக்கடன் ஏற்றிடவே நீலமயிலழகன்
அலங்கார வேலனாய் வீதி வருகின்றான்

திருமுறைச் செல்வர்
ப.பாலசுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள்வழியில் வீண்செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. மாலையில் வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும்.

**இடபம்:** காலையில் சற்றுச்சோர்வாக இருக்கும். பிற்பகலுக்குமேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். திடீர்ச்செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**சிம்மம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாய்வழி உறவுகளுக்காக செலவுசெய்யவேண்டி வரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன்வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மாலையில் வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக அமையும்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத் துணை ஆதரவாக இருப்பார். வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**விருச்சிகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மகரம்:** இன்று எதிலும் சற்றுப் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மாலையில் குடும்பத்துடன் கோயில்களுக்குச் செல்லும் வாய்ப்பு உண்டாகும்.

**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால்சமாளித்துவிடுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** எதிர்பாராதபணவரவுடன், திடீர்ச்செலவுகளும் ஏற்படும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்துகொடுப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். மாலையில் உறவினர் அல்லது நண்பர் வீட்டுக்குச் செல்லும் வாய்ப்பும் அதனால் மனதில் உற்சாகமும் ஏற்படும்.



# யாழ்ப்பாணத்தில் முதல்முறை உருளைப்பந்துவிளையாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 4


யாழ். மாவட்டத்தில் முதல்முறையாக உருளைப்பந்து விளையாட்டுப் பயிற்சி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் சானு பவுன்டேசன் நிறுவனத்தினால் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கான தொடக்க நிகழ்வாக கென்யாவில் இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி மூன்றாம் இடத்தைப் பெற்று பெருமை சேர்த்த வீரர்கள் பங்குபற்றி பயிற்சிகளை வழங்கினர். நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி கோட்டக் கல்விப்பணிப்பாளர், பழையமாணவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர்கலந்துகொண்டனர். (ச-28)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 4

மாத்தளை ரோகிணியின் 'உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள்' நூல் வெளியீடு கொட்டகலை ரிசிகேஸ் மண்டபத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இரண்டாம் பதிப்பின் தொகுப்பாசிரியர் ரா.ராஜாராம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஜெ.ரவிகாந்தன் வரவேற்புரையையும், எழுத்தாளர் மு.சிவலிங்கம் நூல் அறிமுகவுரையையும், பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி எம்.எம்.ஜெயசீலன் நூல் ஆய்வுரையையும், எழுத்தாளரும் மேமன் கவி, இலக்கியச் செயற்பாட்டாளருமான கி.பொன்னுத்துரை மற்றும் கவிஞரும் எழுத்தாளருமான மொழிவரதன் சி.மகாலிங்கம் ஆகியோர் கருத்துரைகளையும் வழங்கவுள்ளனர். (ச-159)



# நினைவுப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக. 4

கனடாவில் அமரத்துவமடைந்த அமரர். சோமசுந்தரம் சிறீதரனின் நினைவுப் பிரார்த்தனை நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது அண்மையில் வெளியான 2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் 9ஏ பெறுபேறு பெற்றுச் சித்தியடைந்த குப்பிழானைச் சேர்ந்த மாணவி கே. வேணி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். (ச-66)

அமரர். தவபாலன் கிரிதரனின் பிறந்தநாள் நினைவாக குருதிக்கொடை முகாம் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உடுப்பிட்டி விநாயகர் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-66)




# குருபூசை நிகழ்வு



யாழ்ப்பாணம், ஓக. 4

ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 40ஆவது ஆண்டு குருபூசை நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து 'குருவாய் வருவாய்' எனும் தலைப்பில் ஆசிரியர் துரை கணேசமூர்த்தி சிறப்புரை நிகழ்த்தினார். (ச-25, 66)



சாவகச்சேரி நகரசபையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நகரை அழகுபடுத்தும் செயற்றிட்டத்துக்குப் பயன்படுத்தும் புல்வெட்டும் இயந்திரம் அண்மையில் கையளிக்கப்பட்டது. சாவகச்சேரிப் பொதுச்சந்தையில் நீண்டகால வியாபாரியான அமரர் சி. அரியரத்தினம் நினைவாக அவரது குடும்பத்தினரால் நகரசபைத் தவிசாளர் வ. ஸ்ரீபிரகாஸிடம் குறித்த இயந்திரம் கையளிக்கப்பட்டது. (ச-9)

# உதைபந்து அறிவிப்பாளர் மீது யாழில் கும்பலொன்று தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் அறிவிப்பாளராகக் கடமையாற்றிவிட்டு, திரும்பியவர்மீது கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடந்துள்ளது. பாதிக்கப்பட்டவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஒற்றுமையின் தூய்மையான பயணம்

# 14, 15ஆம் திகதிகளில் யாழில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஓக.4

**ஜனாதிபதியின் எண்ணக்கருவான 'கிளீன் ஸ்ரீலங்கா' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக 'இதயபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு ஒற்றுமையின் தூய்மையான பயணம்' எனும் கருப்பொருளிலான நடமாடும் சேவை எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.**

14ஆம் திகதி பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி ஆகிய பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கியவகையில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும், 15ஆம் திகதி உடுவில், தெல்லிப்பழை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் உடுவில் பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் ஆட்பதிவுச் சேவை, பிறப்பு இறப்புச் சான்றிதழ் வழங்கும் சேவை, ஓய்வூதியச் சேவை, வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சேவை, மோட்டார் வாகனப் பதிவுகள், கம்பனிப் பதிவுகள், சுகாதாரச் சேவைகள் (கண் பரிசோதனை மற்றும் மருத்துவ சேவைகள்), ஏற்றுமதிக்கான வாய்ப்புகள், வடக்கு மாகாணத்தின் சகல அமைச்சுக்கும் உரிய சேவை, பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சிசபைகளுக்கான சேவைகள் உள்ளிட்ட சேவைகள் இடம்பெறவுள்ளன.

இந்த நடமாடும் சேவைக்கான முன்னாயத்த ஏற்பாடுகளை யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நேரில் சென்று ஆராய்ந்து அறிவுறுத்தல்களைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கினார். (ச-66)

## போதைப்பொருளுடன் இந்தியர்கள் கைது

கொழும்பு, ஓக.4

8 கிலோ 220 கிராம் குஷ் போதைப்பொருளுடன் இரண்டு இந்தியர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு விமானநிலைய வருகை முனையத்தில் வைத்து அவர்கள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டனர். (ச-இ)

## 7 மாதங்களில் ரூ.1200 பில்லியன் குவித்தது சுங்கம்!

கொழும்பு, ஓக.4

சுங்கத் திணைக்களம் 7 மாதங்களில் 1200 பில்லியன் ரூபாவுக்கும் அதிக வருமானத்தைப் பெற்றுள்ளது.

ஜூலை மாதத்தில் மாத்திரம் 231 பில்லியன் ரூபா அதிகூடிய வருமானம் கிடைத்துள்ளது. அந்த வகையில் இவ்வாண்டு சுங்கத் திணைக்களத்துக்கான வருமான இலக்கை இலகுவாக அடையமுடியும் என சுங்கப் பேச்சாளர் சீவலி அருங்கொட தெரிவித்துள்ளார். (ச-இ)



## தேசபந்துவின் விவாதம் நாடாளுமன்றில் நாளை

கொழும்பு, ஓக.4

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அந்தப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் நாளை நடைபெறவுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நாடாளுமன்றம் நாளை முற்பகல் 9.30 மணிக்கு கூடுகின்றது.

ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை மேற்படி தீர்மானம் தொடர்பில் விவாதம் நடத்தப்படும். அதன்பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

மேற்படி தீர்மானத்துக்கு ஆதரவாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வாக்களிக்கவுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி எதிராக வாக்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்பனவும் ஆதரவாக வாக்களிக்கவுள்ளன என்று தெரியவருகின்றது. (ச-44)

## மீன்பிடிப் படகுகள் கணக்கெடுப்பு

கொழும்பு, ஓக.4

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு, 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்துடன் இணைந்து, நாடு தழுவிய ரீதியில் தேசிய மீன்பிடிப் படகுகள் கணக்கெடுப்பை நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இந்தக் கணக்கெடுப்பு இன்று 4ஆம் திகதிமுதல் எதிர்வரும் 20ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இலங்கையின் கரையோரப் பகுதிகளில் பரவலாக உள்ள சுமார் 50,000 மீன்பிடிப் படகுகள் தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தரவுத்தொகுப்பை உருவாக்குவதே இதன் பிரதான நோக்கமாகும்.

இதன்மூலம், தொழிலில் தீவிரமாக ஈடுபடும் படகுகளை அடையாளம் காண்பது, பாவனையில் இல்லாத மற்றும் பழுதடைந்த படகுகளை கரையோரத்திலிருந்து அகற்றுதல், சுற்றுலாத் துறையின் மேம்பாட்டிற்குப் பங்களிப்பது மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்கான உரிமங்களை ஒழுங்குபடுத்துவது போன்றவை எதிர்பார்க்கப்படுகின்றன. (ச-இ)

## நீங்களே ஒதுக்கினால் எப்பிடி?

இஞ்ச எல்லாரும் படிக்கிறது தேவாரமா இருந்தாலும் இடிக்கிறதென்னவோ கோயிலைத்தான். அப்பிடியான வேலையலாளதான் ஒண்டுமே உருப்படாமல் இருக்குது. கிட்டடியில கொழும்பில இருந்து அமைச்சர் ஒராள் வந்தவர். பனாட்டு, குளிர்பானம், பனங்களி, பன்னவேலைப் பொருள்கள், ஒடியல் எண்டு யாழ்ப்பாணத்தில பனையில இருந்து செய்யிற பொருள்களை எப்பிடி இன்னும் கூடுதலா உற்பத்தி செய்யிறது? அதுகளை எப்பிடி கொழும்பிலையும் வெளிநாடுகளிலையும் விக்கப் பண்ணி, அந்தப்பொருள்களை உற்பத்திசெய்யிறவைக்கு லாபத்தை வாங்கிக் குடுக்கிறது? எண்டெல்லாம் அமைச்சரின்ர தலைமையில ஒரு கலந்துரையாடல் கச்சேரியில நடந்தது. உண்மையா இப்பிடி ஒரு விசயத்தை முன்னெடுக்கிறது நல்லதுதான். இப்ப யாழ்ப்பாணத்துக்காரரே உந்தப் பனம்பொருள்களை வாங்கிறது குறைஞ்சு போட்டுது. என்னதான் மற்ற இடத்துக்காரர் யாழ்ப்பாணத்தாரை 'பனங்கொட்டையள்' எண்டு பழிச்சாலும்கூட, யாழ்ப்பாணத்தில இருக்கிற கனபேர் பனையை மறக்கிற நிலைமையிலதான் இருக்கினம்.

முந்தியெண்டால் வீட்டுக்கு வீடு பனங்கூடல் இருக்கும். எல்லாக்காலத்திலையும் பனையில இருந்து ஏதோ ஒரு பிரியோசனம் கிடைக்கும். பனம்பொருள்கள்தான் எங்கட வாழ்க்கையில முக்கியமாவும் இருந்தது. ஒடியல் புட்டு, ஒடியல் கூழ், பனாட்டு, புழுக்கொடியல், புழுக்கொடியல் மா உருண்டை, பனங்கிழங்கு, கிழங்குத் துவையல், நொங்கு, பனங்கட்டி எண்டு ஒவ்வொருநாள் சாப்பாட்டிலையும் பனையில இருந்து கிடைக்கிற ஏதோ ஒண்டு கட்டாயம் இருக்கும். அதைவிட பெட்டி, கடகம், திருகணை, சுளகு, நீத்துப்பெட்டி, பாய், தொப்பி எண்டு வீட்டில பாவிக்கிற பொருள்களும் பனையில இருந்து வாறதாத்தான் இருக்கும். பனையையும் யாழ்ப்பாணத்தானையும் பிரிக்கவே ஏலாத காலமொண்டு இருந்தது. உடம்புக்குச் சுவாத்தியமான, சத்தான, நஞ்சில்லாத பொருள்களை பனை தந்துகொண்டிருந்தது. கனபேரின்ர சீவியமே பனைதான். ஆனால் இப்ப அதெல்லாம் மலையேறிப்போட்டுது. ஆரும் வெளிநாட்டுக்காரர் வந்தால்தான் பனம்பொருள்களை ஆசைக்கு வாங்கிக்கொண்டு போவினம். மற்றும்படி கைபடாத ரோசாவா அதுகள் ஒரு மூலையில இருக்கவேண்டியதுதான். இப்பிடி வருமானம் இல்லாமல் போனதால பனையில பன்னவேலையள், உற்பத்தியள் செய்யிற ஆக்களும் குறைஞ்சுபோட்டினம்.

இப்பிடியான நிலைமையில பனைக்குத் திரும்பவும் மவுசு வரப்பண்ணுறதுக்காக அரசாங்கம் எடுக்கிற முயற்சியை வரவேற்கத்தான் வேணும். ஆனாலும் கச்சேரியில நடந்த அந்த மீற்றிங்கில ஒரு பெரிய குறை. பனம்பொருள்களை எப்பிடிப் பரவலாக்கிறது எண்டு ஆராய வந்தவைக்கு பனம்பொருள்களில் செய்த பனங்காய்ப் பணியாரத்தையோ, பனம் பானத்தையோ, கருப்பணியையோ, இல்லாட்டி பனங்கட்டியில காய்ச்சின ஆடிக்கூழையோ குடுத்திருந்தால் வந்தவைக்கும் திருப்தியா இருந்திருக்கும். ஆனால் பனம்பொருளுக்கு மவுசு ஏத்த நடத்தின கலந்துரையாடலுக்கு கச்சேரிக்காரர் றோலும், பற்றீசும், பைக்கற்றில அடைச்ச கொழும்பு கூல் ட்ரிங்ஸும் தான் குடுத்தவை. இவையே தங்கட கலந்துரையாடலுக்கு பனம்பொருள்களை ஒதுக்கிவைச்சுப்போட்டு, வெளியால என்னெண்டு அதை 'புறமோட்' பண்ணப் போயினம் எண்டுதான் விளங்காமல் கிடக்கு.

padsi@uthayan.com - பட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிதண்ணீர்த் தடையும் வீதித்தடையும் அறிவிப்பு

யாழ்.மாநகரசபையின் குடிதண்ணீர் விநியோகக்குழாயில் உடைவு ஏற்பட்டுள்ளமையினால் இன்று 4ஆம் திகதி பி.ப. 8.30 மணியிலிருந்து நாளை 5ஆம் திகதி காலை வரை கே.கே.எஸ். வீதிக்குச் செல்லும் நாவலர் வீதியில், யாழ்ப்பாணம் இலுப்பையடிச்சந்திப் பகுதியில் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் காரணமாக நாளை 5ஆம் திகதியும் நாளைமறுதினம் 6ஆம் திகதியும் யாழ். மாநகரசபையின் குடிதண்ணீர் விநியோகம் தடைப்படும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படும். அத்துடன் கே.கே.எஸ். வீதிக்குச் செல்லும் நாவலர் வீதியில் இலுப்பையடிச் சந்திப் பகுதியில் திருத்தவேலை இடம்பெறும் போது வீதித்தடை ஏற்படுத்தப்படும் வேளையில் அவ்வீதியில் பயணிப்பவர்கள் மாற்று வீதிகளைப் பயன்படுத்தவேண்டும். மாற்றுவீதியாக நாவலர் வீதியில் பிறவுண் வீதிச் சந்தியிலிருந்து பிறவுண் வீதி மற்றும் அரசடி வீதியூடாக கந்தர்மடம் சந்தியில் பலாலி வீதியை அடையமுடியும். இத்தடைகள் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு வருந்துகின்றோம் என்று யாழ். மாநகரசபை அறிவித்துள்ளது. (ச-இ)

## மரண அறிவித்தல்



பிறப்பு 11 . 10 . 1964

இறப்பு 31 . 07 . 2025

### கோபாலகிருஸ்ணசாமி லிங்கேஸ்வரன் (ஈசன்)

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலகிருஸ்ணசாமி லிங்கேஸ்வரன் (ஈசன்) அவர்கள் (31.07.2025) வியாழக்கிழமை எல்லாம் வல்லவனின் பாதக் கமலங்களைச் சரணடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலகிருஸ்ணசாமி - குணமணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகராசா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், ஜெகதீஸ்வரி (ஜெயா) அவர்களின் ஆருயிர் கணவரும், கபிலா (லண்டன்) அவர்களின் பாசமிகு தந்தையும், பிரதீபன் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும், அபிதன், அத்விகா (லண்டன்) அவர்களின் பேரனும், காலஞ்சென்ற தங்கேஸ்வரி, தயாகரன் அவர்களின் சகோதரனும், நவம் (லண்டன்), தங்கராசா, வாணிசிறி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவபாலனின் அன்புச் சகலனும், காலஞ்சென்ற நந்தன் - சுபனா (லண்டன்), றஞ்சன் - சுமிதா (லண்டன்), கஜனன் (லண்டன்) ஆகியோரின் சித்தப்பாவும், அனுதீபன் - துர்கா (கனடா), விபூசன் - தூரிகா (கனடா) அவர்களின் மாமனாரும், கிருஷன் - கம்சி, ஜருண்சன் அவர்களின் பெரியப்பாவும், யம்சி, யனோஸ் (லண்டன்), ருத்வேத் (கனடா), மிர்த்திக், அவர்களின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.08.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 11.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 872 8562, 077 959 7246
076 852 4003

மீசாலை கிழக்கு,
மீசாலை, சாவகச்சேரி

(CS 59022) E

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 03 . 1943

மறைவு 03 . 08 . 2025

### நீக்கிலஸ் அந்தோனிப்பிள்ளை

16/4, பாரதி வீதி, கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலஸ் அந்தோனிப்பிள்ளை அவர்கள் நேற்று (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ்-லட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற சித்திரா அவர்களின் அன்புக் கணவரும் மாலினி, மைதிலி, சியாம், ஜெயந்தி, நிலாந்தி, எனிற்ரோ ஆகியோரின் அன்புத் தந்தையும் றொபின், விஜயன், நிலோஷனா மற்றும் காலஞ்சென்ற வசந்தன், கொன்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரன், நரேன், துசி, வெனிற்றா, அனிற்றா, டினோஜன், ஜோய், சுவர்ணா, சியாந்தீப், எபின், சர்மி ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெஷூராவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2025) திங்கட்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதாசேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆன்மீக அருளுரை

யாழ்., ஓக.4 நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருந் திருவிழாக் காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் ஆன்மீக அருளுரை இன்று திங்கட்கிழமை ஏழாவது நாளாக இடம்பெறவுள்ளது.

இன்று இரவு8 மணி முதல் இரவு08.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு "முருகன் நம் குரு" எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை ஆற்றுவார். (ச-66)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 . 01 . 1976

மறைவு 04 . 08 . 2024

### சுகுமார் நாதன்

அப்பாவுக்கு அப்பாவாக கடைசிவரை இருப்பீர்கள்
என நினைத்தேன் இப்படி இடைநடுவில் விட்டு
சென்றீர்களே என் அன்பு அத்தான்

சுகுமார் நாதன்
கெருடமடு
மன்னாகண்டல்

ஆரியகுளச்சந்தி றாஜி மரஅரிவுத் தளம்
தட்டாதெரு ஸ்ரீமுருகன் மரஅரிவுத் தளம்
அன்பு மூத்த மருமகன்
வசந்தன் (சகலன்), வக்சலா (மச்சாள்)
குடும்பத்தினர்
யாழ்ப்பாணம் ஓட்டுமடம்.

(CS 59008) E

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# தவறு யார் பக்கம்?

**பு**திய கல்விச் சீர்திருத்தம் தொடர்பாகவும், வடக்கின் கல்விநிலை பற்றியும் கலந்துரையாட யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த பிரதமர் ஹரிணி 'வடமாகாண ஆசிரியர்கள் பலரும் யாழ்ப்பாண நகரப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பணியாற்றவே விரும்புகின்றனர். இது மிகவும் தவறான அணுகுமுறையாகும். கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் சேவையாற்றுவதற்கு அனைவரும் முன்வரவேண்டும்' என்றொரு கருத்தை வெளியிட்டிருந்தார். அவரின் கூற்றுப்படி பார்த்தால், யாழ்.நகரில் உள்ள பாடசாலைகளில் மட்டுமே ஆசிரியர்கள் தேவைக்கு அதிகமாக உள்ளதாகவும், ஏனைய பகுதிகளில் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகவுமே அர்த்தப்படுத்தவேண்டும். ஆனால் பிரதமருக்குகள யதார்த்தம் சரிவரப் புரியவில்லை அல்லது அவருக்கு தகவல் கொடுத்தவர்கள் தவறான தரவுகளைக் கொடுத்திருக்கவேண்டும்.

உண்மையில் நகரப்பாடசாலைகளில்தான் தங்கள் பிள்ளைகள் கற்கவேண்டும் எனப் பெற்றோர் நினைப்பதால்தான், மாணவர்களின் எண்ணிக்கை கிராமப்புறப் பாடசாலைகளில் வீழ்ச்சியடைந்து வருகின்றது. கிராமங்கள் தேய, நகரங்கள் ஊதிப்பெருக்கின்றன. மாணவர் எண்ணிக்கைக்கேற்ப,அவர்களுக்கான கற்றலைச் சரியானபடி வழங்க நகர்ப்புறப் பாடசாலைகளில் ஆசிரிய ஆளணியும் அதிமாகத் தேவைப்படுகின்றது. அதனால் மேலோட்டமாகப் பார்க்கின்றபோது, கிராமப்பாடசாலைகளை விடவும், நகர்ப்பாடசாலைகளில் அதிகமான ஆசிரியர்கள் பணியாற்றுவது போலவே தோன்றும், இந்தநிலை யாழ்ப்பாணத்தில் மட்டும்தான் என்றில்லை, இலங்கை முழுவதும் இதுதான் நிலைமை. இப்படியிருக்க, யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் மட்டும்தான் நகரப்பாடசாலை மோகம் கொண்டுள்ளனர் என்ற பிரதமரின் குற்றச்சாட்டு ஏற்கத்தக்கதல்ல. அத்தோடு, எந்தவொரு ஆசிரியரும் தான் நினைத்தவுடன், நகரப்பாடசாலைக்குச் செல்லவும் முடியாதே. இடமாற்றக் கொள்கையின் அடிப்படையில் எங்கெங்கு எந்தெந்த ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமெனத் தீர்மானிப்பது கல்வித்திணைக்களமும், கல்வியமைச்சும்தான். ஒருவேளை பிரதமர் சொன்னதைப் போல நகரப்பகுதிகளில் மிகை ஆசிரியர்கள் இருப்பார்களானால் அந்தத் தவறு அரசாங்கத்தினுடையதே தவிர ஆசிரியர்களுடையதல்ல.


எல்லோருமே தங்கள் இருப்பிடத்துக்கு அண்மையிலேயே பணியாற்ற விரும்புவர். அதுவே மனித இயல்பும்கூட. இந்தநிலையில் ஆசிரியர்சேவையில் உள்ளவர்களுக்கான இடமாற்றங்கள், நியமனங்கள் பொருத்தமானவையாக உள்ளனவா என்ற கேள்வியும் எழவே செய்கின்றது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு புதிதாக நியமனம் கிடைத்தால், அவருக்குரிய பாடநெறிக்கான வெற்றிடம் இங்கு நிலவினாலும்கூட, எடுத்த எடுப்பிலேயே வெளிமாவட்டங்களுக்கு நியமிக்கும் போக்கே தொடர்கின்றது. வெளிமாவட்டத்தில் போதுமான காலம் பணியாற்றிய பின்னரும் ஆசிரியர்கள் சொந்தமாவட்டத்துக்கு இடமாற்றலாகி வருவதென்பதும் முயற்கொம்பான காரியமே. அதிகாரிகள் நினைக்கும்போது மட்டுமே அவர்கள் சொந்தமாவட்டத்துக்குத் திரும்பிவரலாம். அப்படி வந்தாலும், யாழ்ப்பாணத்திலும் ஆசிரியர்களின் இருப்பிடங்களில் இருந்து மிகத்தொலைவில் உள்ள பாடசாலைகளுக்கே நியமனம் கொடுக்கப்படுகின்றது. ஆசிரியர்களை அலைக்கழிக்க வைப்பதில் அதிகாரிகளுக்கு அப்படியொரு ஆனந்தம். எனவே,தங்கள் சொந்த ஊரில் உள்ள பாடசாலைகளில் கற்பிக்காமல் வேறு தூர இடங்களில் (நகரப் பாடசாலைகள் உட்பட ) ஆசிரியர்கள் பணியாற்றுவதென்பது அவர்களின் சொந்த விருப்பத்தால் அல்ல, அரசாங்கத்தின் தவறான இடமாற்றக் கொள்கைகளே அதற்குக் காரணம். இதனைப் பிரதமர் விளங்கிக் கொண்டு ஆசிரியர்களுக்கு சரியான்வகையில் இடமாற்றங்களை வழங்கி, ஆளணியைப் பொருத்தமான வகையில் பகிர்ந்தால் எல்லாமே சுபமாக நடக்கும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

மடையர்களுடைய அகராதியில்தான்
இயலாது என்ற சொல்லைக் காணமுடியும்.

– நெப்போலியன் –



# ஆசிய நாடுகளுக்கு இடையிலான போட்டித்தன்மையை சரிசெய்க!

## சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 4

**அமெரிக்காவினால் இலங்கைக்கான தீர்வைவரி 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பினும், எதிர்வருங்காலங்களில் இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்குப் பொருள்களை ஏற்றுமதிசெய்யும்போது ஆசிய நாடுகளுக்கு மத்தியில் போட்டித்தன்மை உருவாகும். இதுதொடர்பில் கவனம்செலுத்தி, நாடு என்ற ரீதியில் ஒருமித்து செயலாற்றித் தீர்வுகாண வேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் உற்பத்தித்துறை மிகக்குறைந்தளவிலான செயற்றிறனையே கொண்டிருக்கிறது. அதேபோன்று மின்கட்டணம் மிக உயர்வாகக் காணப்படுகிறது. கைத்தொழிற்றுறை வலுவிழக்கக்கூடிய நிலையில் உள்ளபோதிலும், உலகளாவிய ரீதியில் அதிக எண்ணிக்கையான விடுமுறைகளைக் கொண்ட நாடாக இலங்கை இருக்கிறது. அதுமாத்திரமன்றி துறைமுகம், பொதுப்போக்குவரத்து உள்ளிட்ட ஏனைய துறைகளால் அடிக்கடி முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைநிறுத்தப்போராட்டங்களினால் நாட்டின் உற்பத்தித்துறை மிகமோசமான சவாலுக்கு முகங்கொடுத்திருக்கிறது. எனவே நாம் எம்முடன் போட்டியிடும்நிலையில் உள்ள ஏனைய ஆசிய நாடுகளின் உற்பத்தி நிலைவரம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தவேண்டும்- என்றுள்ளது. (ச-இ)



# மாத்தறையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஓக. 4

மாத்தறை, கபுகமவில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். மோட்டார்சைக்கிளில் வந்த இருவர், காயமடைந்த நபர்மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

காயமடைந்த 48 வயதுடைய ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# பிரபல தேரர் விரைவில் கைது

கொழும்பு, ஓக. 4

அரசியலுடன் தொடர்புடைய தேரர் ஒருவர் பல வருடங்களுக்கு முன் அரசியற்கட்சியொன்றின் செயலாளரைக் கடத்திய குற்றச்சாட்டின்கீழ் விரைவில் கைதுசெய்யப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தக் கடத்தலுக்கு தேரர் உள்ளிட்ட சிலர் திட்டம் தீட்டினர் என்று கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக அந்தத் தேரர் கைதுசெய்யப்படவுள்ளார் என்று பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது. (ச-75)



# சுற்றுலாவிகளுக்கு 'லைசென்ஸ்'

கொழும்பு, ஓக. 4

கட்டுநாயக்க விமானநிலையத்தில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்குத் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் நேற்றுமுதல் ஆரம்பமாகியுள்ளன. இந்த நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க விமானநிலையத்தில் ஒரு சிறப்புக் கருமபீடம் நிறுவப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# பொலிஸ் சேவைக்கு தனிச்சம்பளக் கட்டமைப்பு



கொழும்பு, ஓக. 4

பொலிஸ் சேவைக்கு தனிச் சம்பளக் கட்டமைப்பைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜனாதிபதியிடம் தெரிவித்து 2026 வரவு - செலவுத்திட்டத்துக்கான பொருத்தமான திட்டங்களை சமர்ப்பிப்பதாகவும் அவர் கூறினார். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பொதுப் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர்களின் ஆலோசனைக்குழுவில் அமைச்சர் ஆனந்த விஜேபால இதனைத் தெரிவித்தார். (ச-இ)

நாளை

செவ்வாய்க்கிழமை- ஆடி 20

05.08.2025

சுபநேரம் : 10.34 - 12.04

ராகுகாலம் : 03.04 - 04.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை **திருமதி.பியற்றீஸ் பிரியதர்சினி றொபேட் ஆனந்தராஜ்**
அவர்களின் அன்புத்தந்தையார்
**அமரர்**
**அந்தோனிமுத்து செபஸ்ரியாம்பிள்ளை**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**தோற்றம்** 30.05.1937 **மறைவு** 01.08.2025

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி**

## மரண அறிவித்தல்



### அமரர் விநாசித்தம்பி மயில்வாகனம் (சிறி)

**(ஓய்வு நிலை நில அளவைதிணைக்கள உத்தியோகத்தர்)**

செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும், உபயகதிர்காமம், புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி மயில்வாகனம் அவர்கள் கடந்த (02.08.2025) சனிக்கிழமை எல்லாம்வல்லவனின் பாதக் கமலங்களை சரணடைந்தார்.

அன்னார் தவமலர் அவர்களின் அன்புக் கணவரும், விநாசித்தம்பி-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், பூபாலசிங்கம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், மலர்மதி, மதிவருணன் (லண்டன்), மலர்விழி, மதனராசா (மதன் ரவல்ஸ்) ஆகியோரின் அன்பு தந்தையும், செல்வகுலசிங்கம், சந்தியா, கோபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், நடராசா (ஓய்வுநிலை கிராம அலுவலகர்), கனகரத்தினம், சோமசுந்தரம் (ஓய்வு நிலை பயிற்றுநர்-இலங்கை போக்குவரத்து சபை), பவளநாதன் (முன்னைநாள் களஞ்சிய காப்பாளர் வடமராட்சி கிழக்கு, ப.நோ.கூ.ச), சிவசுப்பிரமணியம் (முன்னைநாள் முகாமையாளர், வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.ச), விக்கினேஸ்வரன் (ஓய்வு நிலை வருமானவரி பரிசோதகர்), காலஞ்சென்ற அன்பரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவபுவனேஸ்வரி, தவபுனிதமலர், தவகுகானந்தம் (குணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகிந்தன் (LB FINANCE, நெல்லியடி), மதுஷா, நிதுஷா, மகிஷா, மகிசன், பாவலன், கபிலன், அபிஷா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2025) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் புலோலி தெற்கு, உபயகதிர்காமம், கந்தமுருகேசனார் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கந்தமுருகேசனார் வீதி,**
**உபயகதிர்காமம்,**
**புலோலி தெற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 348 3708**

## 23 ஆம் ஆண்டு நினைவுருகல்

பிறப்பு 03 . 09 . 1936



இறப்பு 19 . 07 . 2002

**அமரர் நயினையூர்**
### திரு. இராமநாதன் கோபாலபிள்ளை
**திதி: ஆடி மாத பூர்வபக்க ஏகாதசி (04.07.2025)**

எமது குடும்பத்தின் சுடர் குலவிளக்கே ஐயா!
கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப்போனாலும்
எம் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழ்ம்
மண்விட்டு நீங்கள் விண்ணோக்கி சென்றாலும்
கண்விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

ஐயாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அரசடிப் பிள்ளையாரையும், நயினை நாகபூசனி அம்மனையும், நல்லூரானையும் பிரார்த்திக்கின்றோம்.

**2/1, மூத்தவிநாயகர்வீதி**
**கடுக்காயடிலேன்**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**உங்கள் பிரிவால் துயருறும்**
**பிள்ளைகள்**

# நகைச்சுவை நடிகர் மதன் பாப் காலமானார்



சென்னை, ஓக.4

பிரபல நகைச்சுவை நடிகரும், பன்முகக் கலைஞருமான மதன் பாப் தனது 71ஆவது வயதில் நேற்று சென்னையில் காலமானார். தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி எனப் பல்வேறு மொழிகளில் நடித்துப் பிரபலமானவர் மதன் பாப். தமிழில் 150க்கும் அதிகமான படங்களில் நடித்தவர். குறிப்பாக அவருடைய முகபாவனைகள், தனித்துவச் சிரிப்பு மிகவும் பிரபலம். முதலில் இசையமைப்பாளராகவே தனது கலையுலக வாழ்க்கையைத் தொடங்கினார். பின்பு நடிகர், நிகழ்ச்சித் தொகுப்பாளர், மிமிக்ரிக் கலைஞர் எனப் பன்முகத் திறமைகளை வளர்த்துக்கொண்டார். நீங்கள் கேட்டவை, வானமே எல்லை, தேவர் மகன், ஜாதி மல்லி, உழைப்பாளி, திருடா திருடா, மகளிர் மட்டும், சதிலீலாவதி, பூவே உனக்காக, தெனாலி, ப்ரெண்ட்ஸ், பம்மல் கே சம்பந்தம், கிரி, மாப்பிள்ளை உள்ளிட்ட பல படங்களில் இவரது நகைச்சுவைக் காட்சிகள் இன்றளவும் ரசிக்கப்பட்டு வருகின்றன. (ச-இ)

## INVITATION FOR BID 2025/05
## VALIKAMAM SOUTH WEST PRADESHIYA SABHA MANIPAY.

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam South West Pradeshiya Sabha, Manipay invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway/Buildings construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents (Works specified in Table below)
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025-08-04 To 2025-08-18 during 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam South West Pradeshiya Sabha, Manipay (T.P:021-2256647, e.mail: vswps@yahoo.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam South west Pradeshiya Sabha, Manipay on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam south west Pradeshiya Sabha, Manipay as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2025-08-04 To 2025-08-18 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2025-08-11 |
| | Closing and Opening of Bids | At 2.30 P.M on 2025-08-19 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(16)/W/CF/2025/13 | Reconstruction of Murugamoorthy kovil Back side road | 4.32 | 60 | C8 or Above (Highway) | 3,500.00 | 43,200.00 | 04.11.2025 | 49 |
| NP/14/41(16)/W/CF/2025/14 | Construction of Kanagasabai Road 1st lane and Reconstruction of Nalluni Road | 2.32 | 60 | C8 or Above (Highway) | 3,500.00 | 23,200.00 | 04.11.2025 | 49 |
| NP/14/41(16)/W/CF/2025/15 | Reconstruction of Mathavadi Road Branch lane (Kalikovil Lane) and Construction of Uyarapulam Road branch lane | 1.27 | 60 | C8 or Above (Highway) | 3,500.00 | 13,000.00 | 04.11.2025 | 49 |
| NP/14/41(16)/W/CF/2025/16 | Reconstruction of Pirasath Road | 3.55 | 60 | C8 or Above (Highway) | 3,500.00 | 36,000.00 | 04.11.2025 | 49 |

**Chairman**
**Local Authority Procurement Committee,**
**Valikamam South west Pradeshiya Sabha,**
**Manipay.**
**04.08.2025.**

(CR 45690) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 25.06.1981

இறப்பு 03.08.2025



## அருள்நாதன் சஞ்சீவன் (தமன்னா ஹோட்டல் உரிமையாளர்)

கோண்டாவில் கிழக்கு நாகநாதன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருள்நாதன் சஞ்சீவன் அவர்கள் நேற்று (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருள்நாதன் மற்றும் கனகாம்பிகை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற யோகேந்திரன் மற்றும் உஷா தம்பதியினரின் அன்பு மருமகனும், வினித்தாவின் பாசமிகு கணவரும், நிதீஸ், ஆதிரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கார்த்திகாயினி, சுஜீவன், காயத்திரி ஆகியோரின் சகோதரனும், சுரேந்திரன், சுதாகர், சுதாந்தன், மதிசாந்தன், கனிஷ்ரன், மிதிலா, டினிசியா ஆகியோரின் மைத்துனரும், யதுசன், வபிசன் ஆகியோரின் பெரிய தந்தையும், அக்ஷயா, கம்ஷாயினி, ரக்ஷிதா, வர்ஷினி, டினுசிகன், டிலான் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (04.08.2025) திங்கட்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நாகநாதன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.


தகவல்:
குடும்பத்தினர்.
075 828 2991

# யாழ். மாவட்டத்தில் கடற்கரை சிரமதானம்

யாழ்ப்பாணம், ஓக. 4

இராணுவத்தின் 51ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரைப் பகுதியில் கிளீன் ஸ்ரீ லங்காத் திட்டம் அண்மையில் முன்னெடுக்கப் பட்டது. யாழ். பாதுகாப்புப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் கே.ஏ.என். ரசிக்க குமார, யாழ்.மாவட்டச் செயலாளர் ம. பிரதீபன், 51 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் எம்.பி.என்.ஏ.முத்துமால, யாழ். பிரதேச செயலாளர் சா.சுதர்சன், நல் லூர்ப் பிரதேச செயலாளர் யசோதா உத யகுமார், யாழ் .மாநகரசபை பிரதி முதல் வர் இ. தயாளன், யாழ். மாநகரசபை ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் உள் ளிட்ட பலரின் பங்கேற்புடன் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(ச-25,20)




# மரண அறிவித்தல்

கவிஞர், கலைஞானி, ஸ்தபதி தவத்திரு சபரிவாச ஐயப்ப,

## செல்லப்பா சண்முகநாதன் - ஆச்சாரியார்

(கலாலய ஷேத்திர முதல்வர்)



யாழ்ப்பாணம் மயிலிட்டியூரை பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கு நீர்வேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஸ்தபதியார் செல்லப்பா சண்முகநாதன் ஆச்சாரியார் அவர்கள் (02.08.2025) சனிக்கிழமை அன்று சரணமடைந்து விட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நீர்வேலி வடக்கு ,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
கலாலயா மயிலிட்டி

# மரண அறிவித்தல்

## தேவராசா இந்திராணி



தோற்றம் 22.06.1959

மறைவு 03.08.2025

காரைநகர் பாலாவோடை அம்பிளாவைப் பிறப்பிடமாகவும், அவுஸ்ரேலியா மற்றும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா இந்திராணி அவர்கள் நேற்று (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி-தவமணி தம்பதியரின் அன்பு மருமகளும், தேவராசா அவர்களின் பாசமிகு மனைவியும், தங்கராசா (யாழ்ப்பாணம்), தவராசா (அவுஸ்ரேலியா), தேவராணி (கொட்டக்காடு), தேவரஞ்சினி (காரைநகர்), தவயோகராசா (வவுனியா), தேவதாசன் (அவுஸ்ரேலியா), தேவகுமார் (கொட்டக்காடு-ருசாந்தன் ஸ்ரோர்), சிவகுமார் (அவுஸ்ரேலியா), வசந்தகுமாரி (கொக்குவில்), சந்திராணி (அவுஸ்ரேலியா), தர்மராசா (வட்டுக்கோட்டை), திருமலர் (வவுனியா), ராசமலர் (வவுனியா), புஸ்மலா (வட்டுக்கோட்டை), ஜெயவதனி (அவுஸ்ரேலியா), காலஞ்சென்ற நடராசா மற்றும் கனகரட்ணம் (நோர்வே), வரதராசன் (லண்டன்), கமலாம்பிகை (லண்டன்), காலஞ்சென்றவர்களான தனலட்சுமி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மோகனாம்பாள் (நோர்வே), விக்கினேஸ்வரன் (லண்டன்), விக்கினேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பங்குரு வீதி, வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 519 8269
077 343 9333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொழில்வழிகாட்டல்

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. வளவாள்களாக பிரதேச செயலக மனிதவள மற்றும் திறன் விருத்திப் பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ச-25.9)



'மக்களுடன் ஊராட்சி' எனும் தொனிப்பொருளில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபையின் முதலாவது நடமாடும் சேவை கடந்த செவ்வாய்க்கிழமை கந்தபுரம் வட்டாரத்துக்குட்பட்ட தோணிக்கல் கிராமம் அபிவிருத்திச்சங்கத்தில் இடம்பெற்றது. (ச-41-110)


# INVITATION FOR BIDS
# THUNUKKAI PRADESHIYA SABHA


1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Chairman, Thunukkai Pradeshiya Sabha,Vellankulam Road, Thunukkai invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB)
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 04.08.2025 until 17.08.2025 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 11.08.2025 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 02.30 P.M on 18.08.2025 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
| 1 | PSDG/NP/MU/TKPS/2025/WM/02 | Improvement works of segreation centre at kalvilan damping ground stage II | PSDG Fund | 2.20 | 63 | C9 above (Building) | 1500.00 | 19-Oct-2025 | 33,000.00 | 16-Nov-2025 |
| 2 | PSDG/NP/MU/TKPS/2025/ Bus stand and Bus halts /01 | Renovation of Bus stand and Bus halts in Thunukkai Aria | PSDG Fund | 1.27 | 49 | C9 above (Building | 1500.00 | 5-Oct-2025 | 20,000.00 | 2-Nov-2025 |

. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukkai (T.P: 021 228 4532, email: psthunukkai@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.

5. Bids (Original & Duplicate) S/No from 01 to 04 must be delivered to the Chairman, Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai and Bids (Original & Duplicate) S/No from 05 to 07 must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thuukkai on or before 02.30 P.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai.
6. Pre-Bid Conference will be held at Conference Hall, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukai commencing at 10.30 AM as stated in table above.
7. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Divisional Procurement Committee,
Thunukkai Pradeshiya Sabha,
Vellankulam Road,
Thunukkai.
04.08.2025

# மன்னாருக்கு எடுத்துவரப்படும் இராட்சதக் காற்றாடிகள்

மன்னார், ஓக.4

மன்னார் மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்படும் காற்றாலைகளுக்குப் பொருத்துவதற்காக இராட்சதக் காற்றாடிகள் நேற்று வாகனங்களில் கொண்டுவரப்பட்டன.

இந்தக் காற்றாலை மின் திட்டச்செயற்பாடுகளால் மன்னார் மாவட்டம் தொடர் பாதிப்புகளை எதிர்நோக்கும் ஆபத்துக் காணப்படும் நிலையில் பலராலும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் அரசு அதனைக் கண்டுகொள்ளாது செயற்படுகின்றது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-213)

# சர்வதேச விசாரணைக்கு அநுர அரசு வழிவிடவேண்டும்

## மனோ எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக.4

சர்வதேசக் கண்காணிப்பு விசார ணைக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உடன்படவேண்டும். அதிலே சோமரத்ன ராஜபக்ச சுதந்திரமாக சாட்சியம் அளிக்கவேண்டும். ஆனால், இவற்றுக்கு முன், சிறையில் இருக்கும் சோமரத்ன ராஜபக்சவுக்கு அதி உயர் விசேட பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்குக் குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ச, தனது மனைவி திருமதி எஸ்.சி.விஜேவிக்கிரமமூலம், சர்வதேச விசாரணை நடக்கும் பட்சத்தில் தான் சாட்சியம் அளித்து குற்றம் இழைத்த அதிகாரிகளின் பெயர்களை வெளிப்படுத்தத் தயாராக உள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

அதுகுறித்து சோமரத்ன ராஜபக்சவின் மனைவி திருமதி எஸ்.சி.விஜேவிக்கி ரம, ஜனாதிபதி அநுரகுமாரவுக்குக் கடிதம் எழுதியுள்ளார். இலங்கை வரலாற்றில் இராணுவத்தைச் சேர்ந்த நபர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்து, தனக்கு ஆணை இட்ட மேலதிகாரி களை அடையாளம் காட்டத் தயார் எனக் கூறவில்லை.

ஆகவே, இதை ஏற்று மேல் நடவடிக்கை எடுக்க அநுரகுமார அரசாங்கம் முன்வரவேண்டும். சர்வதேசக் கண்காணிப்பு விசாரணைக்கு உடன்படவேண்டும். அதிலே சோமரத்ன ராஜபக்ச சுதந்திரமாகச் சாட்சியம் அளிக்கவேண்டும் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறைச்சாலையிலிருந்து அமர்வுக்கு வந்த உறுப்பினர்

வவுனியா, ஓக.4
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை அமர்வுக்கு, வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவர் பொலிஸ் பாதுகாப்புடன் பங்கேற்றார்.
தமிழ் மக்கள் கூட்டணியின் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை உறுப்பினரே இவ்வாறு அழைத்துவரப்பட்டார். அமர்வு முடிந்ததும் மீண்டும் அதே வாகனத்தில் அழைத்துச் சென்று சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கடந்த 11 ஆம் திகதி வவுனியா, கூமாங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் உயிரிழந்த நிலையில் அந்தப் பகுதியில் அமைதியின்மையை விளைவித்த குற்றச்சாட்டில் குறித்த உறுப்பினரும் கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-110)

## செம்மணியில்...

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரையில் 130 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 120 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.
செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. நேற்று 29ஆவது நாளாக அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. நேற்றுப் புதிதாக 4 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 3 என்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டன.
அதேவேளை, இரண்டாம் கட்டமாக கடந்த 14 நாள்களாக முன்னெடுக்கப்படும் அகழ்வு நடவடிக்கைகளில் இதுவரை 55 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.
அகழ்வு நடவடிக்கைகள் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்றன.



காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி ஞா.ரனித்தா, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் சார்பான சட்டத்தரணி ஜெ.தற்பரன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியற்துறை மாணவர்கள் ஆகியோரும் அகழ்வு நடவடிக்கைகளின்போது முன்னிலையாகி வருகின்றனர். (அ-எ-26)

## குருநகரில்...

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்கள் தடுத்துவைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும், விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
(அ-எ-26-27)

## செம்மணிப்...

பிரதேசத்துக்கு நேரடியாகச் செல்லவுள்ளனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.
இவர்கள் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக அதிகாரிகள், மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திகளுக்குமான நிலையத்தின் பிரதிநிதிகள் ஆகியோருடனும் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளனர். (அ-எ-26)

## மழைக்கு...

மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.
மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல முறை மழைவீழ்ச்சி கிடைக்கலாம் என்றும், வடக்கு, வடமத்திய, ஊவா, கிழக்கு மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.
(அ-எ-இ)

## ஏற்றுமதி,...

இலங்கைக்கான பரஸ்பர இறக்குமதி தீர்வை வரியை 20 வீதமாகக் குறைத்தமைக்கு ஈடாக, இலங்கை அமெரிக்காவுக்கு பரந்துபட்ட அளவிலான சலுகைகளை வழங்கியுள்ளது என்று தெரியவருகின்றது. இந்தச் சலுகைகள் அமெரிக்கத் தொழில்துறை மற்றும் விவசாயப் பொருள்களுக்குப் பொருந்தும்என்றும்கூறப்படுகின்றது.
இந்தச் சலுகைகளின் அடிப்படையில் அமெரிக்கப் பொருள்களில் அதிகமானவை கட்டணங்கள் இன்றி இலங்கைக்குள் எடுத்துவரப்பட வாய்ப்புள்ளது. அதேநேரம் இலங்கை 50 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள மசகு எண்ணெய் மற்றும் 300 மில்லியன் டொலர் அமெரிக்க மதிப்புள்ள எரிவாயு என்பவற்றையும் அமெரிக்காவில் இருந்து கொள்வனவு செய்ய உறுதியளித்துள்ளது.
இலங்கை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்வதைவிடவும், அமெரிக்காவுக்குக் கணிசமான அளவில் ஏற்றுமதி செய்கின்றது. இந்த இடைவெளியைக் குறைக்க ஜனாதிபதி ட்ரம்ப் விரும்புகின்றார் என்று அமெரிக்கத் தரப்புகள் இலங்கைக்குத் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டிவருகின்றன என்று சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (அ-எ-இ)

## பௌத்த...

கச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டில் பதவி நீக்கப்பட்டு, அந்தத் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளராகக் கடமையாற்றிய கசுன் வெல்லஹேவா பதில் ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.
பௌத்த விவகாரங்களுக்கான ஆணையாளர் நாயகமாக கடமையாற்றிய பிரேமசிறி ரத்நாயக்க தனது கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை என்று புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு குற்றஞ்சாட்டியிருந்தது.
இது தொடர்பான குற்றப்பத்திரிகை கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், பிரேமசிறி ரத்நாயக்கவைப் பதவி நீக்க அமைச்சரவை முடிவு செய்தது என்று புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.
(அ-எ-இ)

## 728 துப்பாக்கி...

கூறுகின்றது. அவரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களுக்கு அமைய கொழும்பில் இருந்து வவுனியா சென்ற புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளும், வவுனியா மாவட்டக் குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவுப் பொலிஸாரும் இணைந்து வவுனியாவில் செட்டிகுளம், துட்டுவாகை மற்றும் நேரியகுளம் பிரதேசங்களில் இரு வீடுகளில் சோதனை மேற்கொண்டிருந்தனர்.
நேரியகுளம் வீடொன்றுக்கு அண்மையில் பிளாஸ்டிக் பீப்பாய் ஒன்றுக்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்த 86 கைக்குண்டுகள், ரி-56 ரகத் துப்பாக்கியின் ரவைகள், கைத்துப்பாக்கிக்கான மூன்று ரவைகள், 5 ஆயிரத்து 600 போதை மாத்திரைகள், 10 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டன என்றும், 3 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.
இந்தநிலையில் கைதுசெய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கமைய செட்டிகுளம், நேரியகுளம் பிரதேசத்தில் வீடொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 728 துப்பாக்கி ரவைகள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன என்றும், இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்றும் கூறப்படுகின்றது. கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் செட்டிகுளம் பிரதேசசபை உறுப்பினரின் சகோதரர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-110)

## சுருட்டுத்...

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## செம்மணிப்...

செம்மணியில் தற்போது இரு மனிதப் புதைகுழிகள் கண்டறியப்பட்டு அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தப் புதைகுழிகளில் தினமும் மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்படுவதுடன், பல்வேறு சான்றுப் பொருள்களும் மீட்கப்படுகின்றன.
இந்தநிலையில், இந்த இரு மனிதப் புதைகுழிகளை விடவும் வேறு மனிதப் புதைகுழிகள் அந்தப் பகுதியில் உள்ளனவா என்பதைக் கண்டறிவதற்கு இன்று நவீன ஸ்கானர் மூலம் அந்தப் பகுதி ஆய்வுக்குட்படுத்தப்படவுள்ளது.
அதேவேளை, இந்த மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சான்றுப்பொருள்களை அடையாளம் காண்பதற்காக நாளை செவ்வாய்க்கிழமை அவை பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்தப்படவுள்ளன.
(அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணைக்கு சாட்சியமளிக்கத் தயார்



## கிருஷாந்தி கொலைவழக்குக் குற்றவாளி சோமரத்ன ராஜபக்ச கூறினாரென அவரது மனைவி ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, ஓக.4

யாழ்.செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப் படும் பட்சத்தில், அதில் சாட்சியமளிப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ச தெரிவித்தாரெனக் குறிப்பிட்டு அவரது மனைவி எஸ்.சி.விஜேவிக்கிரம ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எனது கணவர் சோமரத்ன ராஜபக்ச சட்டவிரோதமான முறையில் தண்டிக்கப்பட்டிருக்கிறார். எனவே செம்மணி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுக்குமாறும், அதில் சாட்சியமளிப்பதற்குத் தான் தயாராக இருப்பதாகவும் எனது கணவர் தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரத்தைப் பொறுத்தமட்டில் கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை மற்றும் அவரது குடும்பத்தினர் படுகொலை செய்யப்பட்டமைக்கும் எனது கணவருக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை. மாறாக 7ஆவது காலணிப்படைத் தலைமையகத்தின் புலனாய்வு அதிகாரியான கப்டன் லலித் ஹேவாகே தலைமையிலான புலனாய்வு அதிகாரிகளால் செம்மணி சோதனைச்சாவடியில் கைதுசெய்யப்படும் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 7 ஆவது படையணித் தலைமையகத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கு சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு மரணித்தவர்களின் உடல்கள் மீண்டும் செம்மணி சோதனைச்சாவடி அமைந்துள்ள இடத்துக்குக் கொண்டுவரப்படும். அங்கு பணியாற்றிய எனது கணவர் உள்ளடங்கலாக இவ்வழக்கில் தண்டனை பெற்ற ஐவரிடமும் அந்த உடல்களைப் புதைக்குமாறு மேலே பெயரிட்ட கப்டன் லலித் ஹேவாகேயினால் ஆணையிடப்படும். அதன்பிரகாரம் எனது கணவர் உள்ளடங்கலாக ஐவரால் செம்மணிச் சோதனைச்சாவடிக்கு அண்மையில் உள்ள பகுதியில் அந்த உடல்கள் புதைக்கப்படும்.

எனது கணவருக்கு மரணதண்டனை விதிக்கப்படுவதற்கான ஒரே சாட்சியாக இருந்தது அவர் மனிதப்புதைகுழிகளை அடையாளம் காண்பித்தமை மாத்திரமேயாகும். எனது கணவருடன் தண்டனை விதிக்கப்பட்ட ஏனைய ஐவரும் உயரதிகாரிகள் கொண்டுவந்து தருகின்ற சடலங்களைத் தாம் புதைத்ததாக நீதிமன்றத்தில் கூறியிருக்கிறார்கள்.

கிருஷாந்தி குமாரசுவாமி உள்ளடங்கலாக அவரது குடும்பத்தினரும் மேலே குறிப்பிட்ட முறைமையில் கப்டன் லலித் ஹேவாகே குழுவினராலேயே கைது செய்யப்பட்டனர். செம்மணிச் சோதனைச்சாவடியில் இறுதியாகக் கைதுசெய்யப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி உள்ளிட்ட அவரது குடும்பத்தினர், கைதான அன்றையதினம் மாலை 4 மணியின் பின்னர் 7ஆம் காலணி இராணுவப்படைத் தலைமையகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு இரண்டு தினங்களின் பின்னர் அவர்கள் கொல்லப்பட்டு, அவர்களது உடல்கள் மீண்டும் செம்மணி சோதனைச்சாவடிக்குக் கொண்டு வரப்பட்டன. அங்கு எனது கணவர் உள்ளடங்கலாக ஏனைய இராணுவத்தினரிடம் அவர்களது உடல்கள் ஒப்படைக்கப்பட்டதுடன், அவற்றைப் புதைக்குமாறு உத்தரவிட்ட கப்டன் லலித் ஹேவாகே, அங்கிருந்து வெளியேறினார்.

தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் எனது கணவரால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு அமைவாக 1999 ஆம் ஆண்டு கப்டன் லலித் ஹேவாகே, கப்டன் பெரேரா, லெப்டினன் உதயகுமார, மொழிபெயர்ப்பாளர்களான பொலிஸ் பரிசோதகர் சமரசிங்க, பொலிஸ் பரிசோதகர் அப்துல் ஹமீட் நஸார், லெப்டினன் துடுகல ஆகிய அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். 6 மாதங்களில் அவர்கள் பிணையில் விடுதலையானதன் பின்னர், அந்த வழக்குக்கு என்ன நடந்தது என யாருக்கும் தெரியவில்லை.

இச்சம்பவத்தின் பின்னர் எனது கணவர் சார்பில் முன்னிலையாவதற்கு விருப்பம் தெரிவித்து, போகம்பரை சிறைச்சாலைக்கு வருகைதந்து அவரைச் சந்தித்த ஜனாதிபதி சட்டத்தரணி குமார் பொன்னம்பலம், எனது கணவரிடம் விடயங்களைக் கேட்டறிந்ததன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்று அவரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருந்தார். இருப்பினும் திடீரென குமார் பொன்னம்பலம் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த நிலையில் மேல்நீதிமன்றத்தின் தீர்ப்புத் தொடர்பில் எனது கணவரால் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. இருப்பினும் உயர்நீதிமன்றத்துக்கு அழுத்தம் பிரயோகித்து, எனது கணவர் உள்ளிட்ட தரப்பினருக்கு மீண்டும் மரணதண்டனைவிதிக்கச்செய்தவர் அப்போதைய ஜனாதிபதியாவார். செம்மணிச் சோதனைச்சாவடி குறித்த சகல தகவல்களையும் மேல்நீதிமன்றத்தில் வெளிப்படுத்தியமையே அதற்குக் காரணமாகும். அந்தப் பழிவாங்கல்கள் இன்றுவரை தொடர்கின்றன.

செம்மணி பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தியமையினால் எனது கணவர் உள்ளிட்ட சாட்சியாளர்கள் குற்றவாளிகளாக்கப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்டு 29 ஆண்டுகள் கடந்திருக்கின்றன.

இதுவரை காலமும் அதிகாரத்தில் இருந்த ஆட்சியாளர்கள் இராணுவத்தின் உயரதிகாரிகளைக் காப்பாற்றி, கீழ்மட்டத்தில் இருந்தவர்களைத் தண்டித்துவிட்டு, குற்றமிழைத்த இராணுவத்தினருக்குத் தாம் தண்டனை அளித்திருக்கிறோம் என்று சர்வதேச சமூகத்துக்குக் கூறிவந்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற யுத்தக்குற்றங்களுடன் தொடர்புடைய சகல இராணுவ உயரதிகாரிகளினதும் பெயர் விபரங்களை எதிர்வருங்காலங்களில் வெளியிடுவதற்கு எனது கணவர் தயாராகிவருகிறார். எனவே எனது கணவரால் என்னிடம் கையளிக்கப்பட்ட இந்தக் கடிதம் தொடர்பில் உரியவாறு அவதானம் செலுத்துமாறு உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

செம்மணி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுக்கும் பட்சத்தில், அதில் சாட்சியமளிப்பதற்குத் தான் தயாராக இருப்பதாகவும் எனது கணவர் தெரிவித்துள்ளார். அத்தோடு இவ்விடயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையிடமும் முறைப்பாடளிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

எனவே நீதியை நிலைநாட்டும் வகையில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமித்து, கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை உள்ளடங்கலாக செம்மணி சோதனைச்சாவடியில் நடைபெற்ற குற்றங்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு, உண்மையான குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுங்கள். எனது கணவர் உள்ளிட்ட ஐவருக்கு மன்னிப்பு வழங்குமாறு உரிய கட்டமைப்புகளுக்குப் பரிந்துரையுங்கள்-என்றுள்ளது. (ச-இ)

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1

**15ஆம் வருட நினைவஞ்சலி**

மண்ணில் 15 - 12 - 1952

விண்ணில் 21 - 07 - 2010



**அமரர் வல்லிபுரம் கணேசலிங்கம்**

(உரிமையாளர், எரிக்கணேஷ் பல்மூக்குக் கண்ணாடியகம்)

திதி : ஆடி மாதம் வளர்பிறை ஏகாதசி (04.08.2025)

அப்பா என்றழைத்த எம் தெய்வமே!
ஆண்டுகள் பதினைந்து ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம் - அப்பா
உங்கள் மெய்யைவிட்டு உயிர் பிரிந்து
இன்று பதினைந்து ஆண்டுகள் ஆனதப்பா - நாங்கள்
கண்கலங்கி வாடுகின்றோம் அப்பா
எங்கள் நெஞ்சில் உங்கள் நினைவுகள்
நிதம் நிதம் வந்து எங்கள் வாழ்வை வழிநடத்துகிறது
உங்களுடன் வாழ்ந்தகால நினைவுகள்
நிதம் நிதம் வந்து எங்கள் வாழ்வை வழிநடத்துகிறது
உங்கள் பொன் மொழியும் புன் சிரிப்பும்
குறுங்கதையும் கண்முன் நிழலாடுதப்பா!
உங்கள் ஆசியுடன் உங்களை நினைத்து
நித்தம் எம் பணியைத் தொடருகின்றோம்
என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழ்கின்றோம் - அப்பா......!!!!!

பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை.

மனைவி, பிள்ளைகள் சகோதரர்கள்

(CS/59015) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, இல 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org